**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

---

IN THE COURT OF I ADDITIONAL SESSIONS JUDGE, CHENNAI.

**Case No. : SC.No.361/2024.** **Date: 04.03.2026**

Deposition of Witness for Prosecution LW - / PW – 3.

Name : திரு.தீப்பக்குமார்.

Father's Name :

Village :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of March 2026.

---

**2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜரில்லை அவரது வழக்கறிஞர் முன்னிலையாகி உள்ளார்.**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திருமங்கலம் காவல் நிலைய சட்டம் ஒழுங்கு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். திருமங்கல காவல் நிலைய குற்ற எண்.497/2006 வழக்கில் புலன் விசாரணை அதிகாரிகளான திரு.செந்தில் குமார், முருகன், ராயப்பன் ஏசுநேசன், தருமலிங்கம் ஆகியோர்கள் தற்போது பணி ஓய்பு பெற்ற சென்று விட்டனர். தற்போது அவர்கள் எங்கு விசத்து வருகின்றனர் என்ற விவரம் தெரியவில்லை. எனவே வழக்கு கோப்பின் அடிப்படையில் நிலைய பொறுப்பு அதிகாரியான நான் சாட்சியம் அளிப்பத்தகு அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வழக்கு கோப்புடன் முன்னிலையாகியுள்ளேன். கடந்த 21.08.2006 அன்று பகல் 12.00 மணிக்கு திருமங்கலம் காவல் நிலைய பொறுப்பில் இருந்து வந்த உதவி ஆய்வாளர் விஷ்வநாதன் என்பவர் நிலையத்தில் இருந்தபோது சென்னை மயிலாப்பூர்

நடுத்தெருவில் வசிக்கும் ஸ்ரீதர் என்பவர் நிலையத்தில் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வான புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.497/2006 ச.பி.397 இதச கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். உதவி ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2**. பின்னர் வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராமச்சந்திரன், ஸ்ரீராமலு ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகசர் **அ.சா.ஆ.3**. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4**. பின்னர் சாட்சிகள் ஸ்ரீதர், ரமேஷ், பாஸ்கர், ராமச்சந்திரன், ஸ்ரீராமலு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பை ஆய்வாளர் செந்தில்குமார் வசம் ஒப்படைத்துள்ளார். ஆய்வாளர் செந்தில்குமார் கோடம்பாக்கம் போக்குவரத்து பிரிவு உதவி ஆய்வாளர் தென்னரசு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து வழக்கு சொத்துக்களான கருப்பு கலர் TN 20 U 0731 என்ற பதிவு எண் கொண்ட ஸ்பெலென்டர் வாகனத்ததையும், நீலக்கலர் சிப்பு கவர் கொண்ட ஸ்மார்ட் புத்தகம் ஒன்றையும், பிரௌன் கலர் தோல் பை ஒன்றும், அதிலிருந்த பணம் ரூ.543420/– ஆகியவைகளையும் சாட்சிகள் ராஜாங்கம், ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் 21.08.2006 அன்று பகல் 12.30 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.5**. பின்னர் சாட்சிகள் ராஜாங்கம், தென்னரசு, செந்தில்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் ஆய்வாளர் செந்தில் குமார் என்பவர் நீதிமன்ற உத்தரவு பெற்று மத்திய சிறைக்கு சென்ற அங்கு வேறு வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்த எதிரிகள் சீனு (எ) சீனிவாசன் (எ) பர்மா சீனு மற்றும் பாபு ஆகியோர்களை

சம்பிரதாய கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி பின்னர் 11 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிபதி முன்னிலையில் காவல் நிலைய பொறுப்பில் எடுத்து திருமங்கலம் காவல் நிலையத்தில் வைத்து 11.00 மணிக்கு சாட்சிகள் ஸ்டாலின் மற்றும் ஜெய்சங்கர் முன்னிலையில் எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் ஸ்டாலின் மற்றும் ஜெய்சங்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலில் ஒப்படைத்துள்ளார். பின்னர் வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் சம்பந்தமாக சாட்சி கமலக்கண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அவர் பணிமாறுதல் ஆகி சென்றுவிட்டதால் அவருக்கு பின்னர் பணிக்கு வந்த ஆய்வாளர்கள் மணிவண்ணன், சுகுமார், ராயப்பன் ஏசுநேசன், ரகுமான் ஆகியோர் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். பின்னர் எதிரிகளுக்கு எதிராக குற்றயிறுதியறிக்கையை ஆய்வாளர் தருமலிங்கம் 20.11.2009 அன்று 10 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்ற முன்னிலையில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

இவ்வழக்கில் எதிரிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றும், இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டன என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>:– இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.
Date : 04.03.2026

I Additional Judge